**CC.No**. 63/2024

**Date**: 19.02.2026

**எ. ம.சா.** 2. பழனிவேல், த/பெ. சுப்பையா, புதுவயல்
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

**1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ம் வகுப்பு படித்துள்ளேன். எதிரி என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். நான் எந்த வெளிநாட்டில் வேலை செய்தேன் என்றால் குவைத் நாட்டில் வேலை பார்த்தேன். நான் எப்போது இந்தியாவிற்கு வந்தேன் என்றால் கடந்த 2024 ஜூன் மாதம் வந்தேன். மேற்படி விபரத்தை எனது கடவுசீட்டை பார்த்தால் தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் என் அக்கா சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் என் அக்காவிற்கும், அவரது கணவருக்கும் சண்டை நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சாக்கோட்டை காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 கி.மீ. இருக்கும். இதுநாள் வரை மேற்படி சம்பவத்திற்கு நான் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நான் சொல்வதுபோல் சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் நான் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது என் அக்காவின் கணவர் மது போதையில் இருந்ததால் நாங்கள் புகார் எதுவும் அளிக்கவில்லை. புகார்தாரருக்கும் எதிரிக்கு இடையே உள்ள தனிப்பட்ட வரவு செலவுகள் குறித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என் அக்கா வீட்டுக்காரர் புகார்தாரருடன் கடந்த 2 ஆண்டுகளாக தவறான முறையில் பேசி வருகிறார். அவ்வாறு எந்த பேச்சுவார்த்தையும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**2) நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் அழைப்பாணை எதுவும் வரவில்லை. என் அக்கா அழைத்ததால் வந்தேன். நான் எதற்காக சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன் என்று எனக்கு தெரியுமா என்றால் எனது அக்கா புகார்தாரரிடம் இருந்து கடன் வாங்கியுள்ளதாக போடப்பட்டுள்ள வழக்கில்**

**என் அக்காவிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு காசோலையின் படி எதிரி புகார்தாரருக்கு பணத்தை திரும்பி செலுத்த கடமை பட்டவர் என்றால் சரியல்ல. என் அக்கா புகார்தாரரிடம் இருந்து எந்த கடனும் வாங்கவில்லை. எதிரி என் அக்கா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.19 15:22:14 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)